2014 ஆகஸ்ட் 12]

சாலையாக இருந்தால், பொதுப் பணித் துறையின் மூலமாகத்தான் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டப்பட வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி, இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 408, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

408—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***33529—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி ஊராட்சி, ரெட்டார்குளத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-15

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி ஊராட்சியில் 8 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், முனைஞ்சிப்பட்டியில் 2, கிரன்குளத்தில் 1, பிள்ளையார்குளத்தில் 1, மேல்முனைஞ்சிப்பட்டியில் 1, கோடன்குளத்தில் 1, சோமநாதபுரில் 1 என 7 மையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்போது ரெட்டார்குளம் அங்கன்வாடி மையத்திற்கு அரசு புல எண் 572-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு,

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பற்றிய கேள்விக்கு நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். சர்வே எண் 572-ல் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் கட்சியின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 409, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

409—

சொந்தக் கட்டடம்

***34866—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, வேலாயுதபட்டிணம் மற்றும் பெரியவீரை கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*